REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை : ஆனி 5உ புதன் (19—6—57) ★ ★ வெளியூர் : ஆனி 6உ வியாழன் (20—6—57) [இதழ் 4

சென்னையில் ஓடும் வண்டிகள் எண்ணிக்கை

சென்னை, ஜூன் 18—

20,000 கார்கள்; 3,000 லாரிகள்; 700 பஸ்கள்; 3,750 சைக்கிள் ரிக்‌ஷாக்கள்; 1,000 குதிரை வண்டிகள்; 250 தானே இயங்கும் ரிக்‌ஷாக்கள்; 1,00,000 சைக்கிள்கள்—இவை தவிர ஆயிரக்கணக்கான மாட்டுவண்டிகள் சென்னை நகரில் மட்டும் ஓடுவதாக போலீஸ் டெபுடி கமிஷனர் சுகுமாரன் அறிவித்துள்ளார்.

உழைப்பு மதிப்பானதே என்ற உபதேசம்....!

★

"தொழிலாளர்கள் தான் நான்கு அடுக்கு மாடியைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் வாழுகின்ற இடம், குனிந்து சென்றால்தான் நுழையக் கூடிய குடிசையாக இருக்கிறது.

"நெசவாளர்கள் தான் உயர்ந்த ரக நேர்த்தியான நூலைக்கொண்டு அழகான ஆடைகளை நெய்திருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் கட்டிக் கொண்டிருப்பது முரட்டுரக நூலால் நெய்யப்பட்ட முரட்டுத் துணிதான்-அதுவும் முழங்காலுக்கும் மேலேதான்.

நவ. 15 முதல் அறப்போராட்டம்!

இரயில்வே குமாஸ்தாக்கள் சங்கம் முடிவு

தாங்கள் பண்டித நேருவுடன் நடத்த உத்தேசித்திருக்கும் பேச்சு வார்த்தைகள் தோல்வியுற்றால், நவம்பர் 15-ந் தேதியிலிருந்து 'பேனா சத்தியாக்கிரகம் செய்யப்போவதாக அகில இந்திய இரயில்வே குமாஸ்தாக்கள் சங்கம், தனது ஏழாவது மாநாட்டில் தீர்மானித்திருக்கிறது.

'தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கும் வஞ்சகப் போக்காகும்'

'ஒருநாள் தெருக் கூட்டுவது உழைப்பின் மதிப்பை உணர்ந்ததாகாது'

உழைப்பாளர்கள் நிலை குறித்து அண்ணா கருத்துரை

17—6—57-ல் நடைபெற்ற சென்னை 'ஜெனரல் அண்டு இண்டஸ்டிரியல் ஒர்க்கர்ஸ் யூனியன்' 13-வது ஆண்டுவிழா—மாநாட்டில் அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையின் முதற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; மற்றொரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

யாத்தாளுக்குக் 'கங்கணம்' கட்டிக்கொண்டார்கள்; மாரியம்மன் கோவில் திருவிழாவுக்கு வேண்டிக்கொண்டார்கள். அதற்காக அந்த ஒரு நாள் பவுடர் தடவிக் கொண்டு ஆடினார்கள்.

"அதைப்போல, இன்றையத் தினம் மாணவர்களையும், வேறு பல அலுவல்களிலே ஈடுபட்டிருக்கிறவர்களையும், 'நாங்கள் உழைக்க வைக்கிறோம் பாருங்கள்' என்று சொல்லி, 'இதோ பாருங்கள்—அவர்கள் போட்டபாதை; மூன்று பர்லாங்கு நீளம் - 25 கெஜ அகலம்; இதை இன்ன மந்திரி திறந்துவைத்தார்' என்று பத்திரிகையிலே வருகிறது.

"பாதையில்லாத இடத்துக்கு எப்படியோ ஒன்று - பாதை கிடைத்தது என்ற வரையிலே வரவேற்கத்தக்கதுதான். ஆனால் மாணவர்களையும் மற்றவர்களையும் பயன்படுத்தி, அதன் மூலம் மாணவர்களுக்கு, 'உழைப்பினுடைய மதிப்பை கற்றுத் தருகிறோம்' என்று எடுத்துச் சொன்னால், அது உண்மையிலேயே உழைப்பாளியைக் கேலி செய்வதற்கு ஒப்பாகுமே தவிர, நல்லபடி ஆக்கித்தருவது ஆகாது.

உழைப்பிற்குப் பலன் கிட்டுமா?

"பாட்டாளி ஆக்கித்தருவது தான், 'இந்தக் கண்ணிலே போட்டால் அந்த கண்ணில் எடுக்கலாம்' என்று நம்முடைய தாய்மார்கள் சொல்லுகிறார்களே - அப்படிப்பட்ட 'கிச்சிடிச் சம்பா' அரிசி; ஆனால் அவன் சாப்பிடுவது நல்ல கார அரிசியும் அல்லது நல்ல கம்பங்கூழும் அல்லது கேழ்வரகும் அல்லது முன்ஷி பெருமகனாரைப் போன்றவர்கள் உணவு அமைச்சர்களாய் இருந்தால் ஒரு 'பிடி' பருத்திக் கொட்டையும்—ஆக இவைகள்தான் அவனுக்கு அளிக்கப்படுகின்றனவே தவிர, அவன் விளைவிக்கின்ற நேர்த்தியான சம்பா அவனுக்குக் கிடைப்பதில்லை.

கிறேன்; ஆனால் அந்தத் தத்துவத்தை எந்த நடைமுறையில் காட்டுகின்றார்களோ அதை நான் வெறுக்கிறேன் — கண்டிக்கிறேன்.

பார்த்து, 'ஏன் எடுக்கவில்லை?' என்று கேட்க, 'தலைவர் கூட்டட்டும், எடுக்கிறேன்' என்று அவர் சொல்ல

யிருந்த நண்பரைக் கேட்டேன்—'இது என்ன?' என்று; அதற்கு அவர் சொன்னார் — 'மாணவர்களும் உழைக்கக் கற்றுக்கொள்கிறார்கள்; இது, Dignity of Labour என்ற தத்துவத்திலே ஒன்று'—என்று?

ஒரு நாளைக்குத் தெரு கூட்டினுல்!

'Dignity of Labour' என்று எடுத்துச் சொல்லி, சில முனிசிபாலிடிகளில் குப்பை கூட்டுகின்ற தொழிலாளி நான்கணா கூலி உயர்வு வேண்டுமென்று கேட்பான்; உடனே, 'Dignity of Labour' — 'உழைப்பிலே மதிப்பிருக்கிறது' என்ற தத்துவத்தைக் கற்றுக் கொண்டிருக்கிற நகர மன்ற உறுப்பினர்கள், 'நீ வராவிட்டால் என்ன — நாங்களே

'ஐயா, நானும்கூட தலைவராகக் கூடும், ஜாக்கிரதை' என்று இவர் சொல்ல, 'அப்படியானால் தொலை; உன்னையும் ஒரு படம் பிடித்துத் தொலைக்கிறேன்' என்று எடுத்து, அது பத்திரிகையிலே வருகிறதே, அது 'Dignity of Labour' அல்ல! ஆனால், அதைத்தான் 'Dignity of Labour' என்று எடுத்துச் சொல்லி, இன்றையத் தினம் 'எல்லோரும் உழையுங்கள்! எல்லோரும் உழையுங்கள்!' என்று அதை ஒரு திட்டமாக்கியிருக்கிறார்கள்.

போலீஸ் வேலைக்கு மாணவர்கள்!

"நான் அன்று மதுரையிலும் இதையே சொன்னேன்; இன்றும் சொல்லுகிறேன்.

"இது உண்மையிலேயே மாணவர்களைக்கொண்டு ஒரு நாளைக்கு போலீஸ்காரருடைய வேலையை பார்க்கச் சொன்னால், அதனாலேயே போலீஸ்காரர்கள் படுகின்ற துயரமும்—தொல்லையும்— அந்த வேலையிலே இருக்கின்ற பளுவும் மாணவனுக்குப் புரிந்துவிடாது; அது எப்படிப் புரியாது என்று கேட்டால், நேற்று இவ்வு நாடகத்திலே எமதர்மராஜன் வேடம் போட்டுவிட்டதால் மறுநாள்

"ஓட்டலிலே சில முதலாளிகள், ஓட்டல் தொழிலாளி கூலி உயர்வு கேட்டால், அந்தத் தொழிலாளியை 'நீ—போ! 'இந்த வடையைத் தட்டவா எனக்குத் தெரியாது — இந்த அடுப்படியிலே நிற்கவா தெரியாது' என்று சொல்லி, ஒரு நாளைக்கு அடுப்படியிலே நின்று கொண்டு தொழிலாளியைவிட திறமையாக வேலை செய்கின்றார் என்று ஒப்புக்கு வைத்துக்கொண்டால்கூட, அதன்மூலமாக அவர், உழைப்புக்குப் பெருமை தந்தவர் ஆகமாட்டார். 'உன்னுடைய வாயிலே நான் மண்ணைப் போடமுடியும்; உன்னுடைய வேலையை நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று, தொழிலாளியின் வயிற்றில் மண் போடுவதற்குத்தான் பயன்படுமே தவிர இவர் அதே வேலைக்கு தொழிலாளியின் நிலையில் போகமுடியுமா? போக இயலாது. போகிறார் என்று ஒப்புக்கு வைத்துக் கொண்டாலும் கூட, இவரிடத்திலே வேலை செய்த தொழிலாளி கூலி அதிகம் வேண்டும் என்று கேட்டாலே, அப்படி இவரும் கேட்காமல் இருப்பாரா என்றால், இவரும் அடுத்த ஆறுவது மாதத்திலே கேட்டே தீருவார்.

"ஏனென்றால், வேலையினுடைய பளுவும், அதிலே கிடைக்கின்ற கூலியின் போதாத்தன்மையும், வாழ்க்கையில் ஏற்படுகின்ற நெருக்கடியும் அந்தக் கேள்வியைக் கேட்க வைக்கும். ஆகையினாலே இந்த முறையிலே இன்றைய தினம் நடத்தப்படுவது, 'மாயமான்' என்று நான் சொன்னால், நீங்கள் அதிலுள்ள பொருண்மையை உணர்ந்து கொள்வீர்கள். அது உண்மையிலேயே தொழிலாளர் நிறுவனங்களுக்கோ, தொழிலாளர்களுக்கோ நன்மையைத் தந்ததாகாது.

(1-ம் பக்கம் பார்க்க.)

ஷெல்லி எழுப்பிய கேள்வி

"இவைகளை யெல்லாம் எண்ணிப்பார்த்த இங்கிலாந்து நாட்டு கவிஞன் ஷெல்லி என்பவன் சொன்னான்—'எதற்காக நீங்கள் உழுகிறீர்கள்? எதற்காக அறுக்கிறீர்கள்? அறுத்தெடுத்த தானியம் முதலாளியினுடைய களஞ்சியத்திற்குப் போவது அந்தகர்களே உங்களுக்குத் தெரியவில்லையா? ஏன் நீங்கள் உழைக்கிறீர்கள்—அறுக்கிறீர்கள்' என்று கேட்டான்.

"இப்படிக் கேட்ட கவிவாணருடைய தத்துவங்கள், தொழிலாளியினுடைய மனதிலே புகுந்து புகுந்து, 'நாம் உழைக்கிறோம்; இதனுடைய பலன் நமக்கு ஒரு துளியும் வரவில்லை ஆகையினாலே உழைப்பினுடைய பலன் நமக்குக் கிடைக்க வேண்டும்' என்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்த பிறகுதான் இன்றையத்தினம், அரசியல் கட்சியிலே உள்ள பெரிய தலைவர்கள் 'Dignity of Labour' — 'உழைப்பிலே மதிப்பிருக்கிறது' —என்று எடுத்துச்சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.

"அவர்கள் சொல்லுகின்ற தத்துவத்தை நான் வரவேற்

தெருவைக் கூட்டுகிறோம், பாருங்கள்' என்று சொல்லி ஒரு நாளைக்கு பெரிய துடைப்பத்தை எடுத்து, அதற்கு முதல் நாளே மனைவியிடத்திலே, 'இடுப்பைக் குனிந்துதான் பெருக்க வேண்டுமா? நிமிர்ந்து பெருக்கக்கூடாதா?' என்று கேட்க, உடனே அவருடைய மனைவி 'நிமிர்ந்து பெருக்கினால் எப்படிக் குப்பை போகும்?' என்று சிரிக்க, 'பார், நாளைய தினம் நான் பெருக்கப் போகிறேன்' என்று சொல்ல, 'உங்களுக்கு ஏன் அந்தத் தலையெழுத்து?' என்று அந்த அம்மையார் சொல்ல, 'இது தலையெழுத்தல்ல; பத்திரிகையிலே கொட்டை யெழுத்திலே வரும்—நீ வேண்டுமானால் பார்' என்று சொல்லிவிட்டு, மறுநாள் காலையிலே தெருவைக் கூட்டுவதைப்போல நாலைந்து நகராட்சி மன்ற உறுப்பினர்கள் கூட்ட, அதை, தொலைவிலே இருக்கிற 'காமிரா'க்காரர் பார்த்து எடுக்காமல் இருக்க, இவர்

நாட்டு நடப்பு அதுதானே!

"நான் அரசியல் பேசுகிறேனோ என்று நீங்கள் யாரும் அருவெறுப்பு அடையத் தேவையில்லை; நாட்டினுடைய நடைமுறையை சொல்லுகின்றேன்.

"நான் ஓராண்டு காலத்திற்கு முன்னால் மதுரைக்குச் சென்றேன். மதுரையிலே அன்றைய தினம், ஒவ்வொரு மூச்சந்திலேயும்—தெருக் கோடியிலேயும்—தெருவினுடைய ஓரத்திலேயும், போலீஸ்காரர்கள் நிற்பதற்குப் பதிலாகவும்— போலீஸ்காரர்களுக்குத் துணையாகவும் கல்லூரி மாணவர்கள் நின்றுகொண்டிருந்

யார் உயிரையும் எவ்வாறு வாங்க முடியாதோ, அதைப்போலவே போலீஸ்காரர் வேலையை செய்துவிட்டதால் மட்டும் மறுநாளே அவர்கள், போலீஸ்காரர்கள் படுகின்ற அத்தனை தொல்லைகளையும் தொல்லைகளையும் அனுபவித்ததாகக் கருதிக் கொண்டால் அதிலே பயன் இல்லை; அது மட்டுமல்லாமல் அந்த ஒருநாளில் பெறுகின்றார்களோ அனுபவம் — அறிவு, அவை உண்மையானவையாக இருந்து பிற்காலத்திலே பயன்படப் போகிறதா என்றால், அதுவுமில்லை.

ஒருநாள் கூத்து-மறுநாள் பயன்?

தார்கள். எனக்கு அது மெத்த ஆச்சரியமாக இருந்தது. மோட்டார் போனால், 'இந்தப் பக்கம் போகலாம்—இந்தப் பக்கம் போகக்கூடாது' என்று போலீஸ்காரர்கள் எப்படி 'ஜாடை'காட்டி நிறுத்தினார்களோ அந்த வேலையை, மாணவர்கள் அங்கே செய்தார்கள். இது எனக்கு மெத்த வியப்பாக இருந்தது. அங்கே

"கிராமப்புறங்களிலே உள்ளவர்கள் ஒரு நாளைக்கு தெருக்கூத்துக் கட்டிக்கொண்டு ஆடுவார்கள். ஆடுகிற நேரத்திலே வீட்டுக்கு வீடு 'வரிசை' வைப்பார்கள். அன்றையத்தினம் அது ஆடிய தோடு சரியே தவிர, அவர்கள் கலைத் துறையிலே ஈடுபட்டார்களா என்றால், அது இல்லை. ஒருநாள், ஒருவரிருந்து—ஈஸ்வரி

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 19—6—57 புதன்

வல்லரசுகளுக்கு எச்சரிக்கை

"அணு, நீர்வாயுக் குண்டு சோதனைகளை உடனடியாக நிறுத்துமாறு, உலகில் மனித வர்க்கத்திற்குப் புனிதமான எல்லாவற்றின் பெயராலும், எல்லா அரசாங்கங்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்" என்று, கொழும்பில் கூடிக் கலந்துள்ள உலக சமாதான மாநாட்டில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

நியாய உணர்ச்சியுடன் இல்லாவிட்டாலும் அனுதாப—மனிதாபிமான உணர்ச்சியுடனாகிலும் அணு ஆயுத வல்லரசுகள் இந்த வேண்டுகோளை அணுகுவார்களேயானால், பலன் ஏற்பட வழியுண்டு.

உடனடியாக அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்துவதற்காக எல்லா சாத்தியமான நடவடிக்கைகளையும், அணு ஆயுதங்கள் வைத்துள்ள வல்லரசு நாடுகளுக்கு தூதுக்குழு அனுப்புவது, ஐ. நா. சபையின்முன் கோரிக்கையை வைப்பது போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவது என்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்நடவடிக்கைகள் வெற்றி பெற வேண்டும் என்று, அணு ஆயுதக் கொடுமைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள விரும்பும் மக்கள் அனைவரும் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

இந்த அணு ஆயுத சோதனைகளினால் உலகின் நில—நீர்ப் பரப்புகள் வேகமாக மனிதவாழ்வுக்கு உலை வைக்கும் நச்சுத் தன்மையடைந்துவருகின்றன என்ற எச்சரிக்கையை, அணு ஆயுதங்களைக் குவிப்பதில் பெருமையும் பாதுகாப்பும் தேடும் வல்லரசுகள் மதிக்க, தொடர்ந்து மறுத்துவருகின்றன.

ஆனால்......!

இப்போது தென் கிழக்கு ஆசியாவில் துவங்கி, இந்தியத் துணைக்கண்டத்தின்மேல் ஒரு கொடிய பார்வையை வீசிவிட்டு பாகிஸ்தான் வழியாக மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி ஆக்கிரமிப்பு நோக்குடன் விரைந்து கொண்டிருக்கும் விஷக் காய்ச்சலான 'இன்புளுயன்சா' என்ற தொத்து நோய் தோன்றுவதற்கே சைபீரியாவிலும், பசிபிக்கிலும் அண்மையில் நடைபெற்ற அணு ஆயுத வெடிப்பு சோதனைகளே என்று பிரிட்டிஷ் விஞ்ஞான இதழ் ஒன்றில் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விஷக் காய்ச்சல் பிரிட்டனையும், இதர ஐரோப்பிய நாடுகளையும் தொத்தாமல் விடாது என்று வேறு 'ஆருடம்' தரப்படுகிறது.

சோதனைக்காக, எங்கோ மனித வாடையற்ற நீர்ப்பரப்பில் நடைபெறும் அணு ஆயுத வெடிப்புகளே உலகின் மிகப் பெரும் பகுதி மக்களை கொடியதொரு விஷக் காய்ச்சலுக்கு ஆளாக்கி வாட்டி வதைத்துவிடும் கொடிய நச்சுத்தன்மையைப் படைத்திருக்குமானால், வெறிகொண்ட நிலையில் போர் முனையிலிருந்து இந்த அணு ஆயுதங்கள் நாண் ஏற்றப்பட்டு வெடிக்கப்படுமானால், அவை விளைவிக்கும் கோரங்களை—நாசங்களை எண்ணிப்பார்க்கவே குலை நடுக்கம் எடுக்கிறது.

'நிபந்தனையின்றி இந்தச் சோதனைகளை வல்லரசுகள் நிறுத்த வேண்டும்' என்ற உலக மக்களின் கோரிக்கையில், மிகுந்த நியாயம் மண்டிக்கிடக்கிறது என்பதை, சோதனைகளின் கொடிய விளைவுகளைக் கண்டபின்னும் வல்லரசுகள் உணர மறுப்பது விவேகமானதல்ல. இந்தப் பூவுலகு முழுமையையும் நச்சுப் பொய்கையாக்கிவிட்டு இந்த வல்லரசுகள் மட்டும் எங்கேபோய் தங்களின் போட்டாபோட்டியை நடத்திக் கொண்டிருக்கப் போகின்றனவோ?

வளுத்துவரும் கண்டனங்களுக்கு செவிசாய்க்க வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது என்பதை அணு ஆயுத வல்லரசுகள் உணர்ந்தாக வேண்டும். உலக மக்களின் எதிர்காலத்திற்காக மட்டுமின்றி, தங்களின் சொந்த நலன் கருதியும் இந்த சோதனைகளை விட்டொழிக்க முன்வராவிட்டால், வெடிப்புகளின் பயங்கரமான விளைவுகளுக்கு ஆளாகிவரும் மக்கள், கண்டனங்கள் முழங்கி - வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருப்பதிலிருந்து மாறுபட்டதோர் வழிமுறையைத்தான், இந்த சோதனைகளின் பயங்கரங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ள நேரிடும் என்று எச்சரிக்கிறோம்.

இராஞ்சியில் கனரக இயந்திர உற்பத்திச்சாலை

கனரக இயந்திர உற்பத்திச் சாலையை இராஞ்சியில் நிறுவ மத்திய அரசாங்கம் விரும்புகிறதாம்.

சுபர்ணரேகா எனும் ஆற்றின் கரையோரமாக இதை நிறுவலாம் என்று ரஷ்ய எஃகுத் தொழில் நிபுணர்கள் ஆலோசனை கூறியுள்ளனராம்.

எகிப்தில் பொதுத் தேர்தல்

350 இடங்கட்கு 1,320 அபேட்சகர்கள்

கெய்ரோ, ஜுன் 18—

எகிப்தில் 3-ந் தேதி பொதுத் தேர்தல் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

350 இடங்களுக்காக மொத்தம் 2,538 பேர் போட்டியிட நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்தனராம். பரிசீலனைக்குப் பிறகு இறுதியாக நிராகரிக்கப்பட்ட அபேட்சகர்களின் எண்ணிக்கை போக மொத்தம் 1,320 அபேட்சகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

செங்கல் தயாரிக்க இயந்திரமாம்!

புதுடில்லி, ஜுன் 18—

இயந்திர சாதனத்துடன் செங்கல் தயாரிக்கும் முறையை மத்தியக் கட்டிட ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்துள்ளதாம்.

இந்த இயந்திரத்தின் மூலம் மணிக்கு 60 வீதம் ஒரு நாளைக்கு 2,000 செங்கல்கள் ஒரு மனிதனால் தயாரிக்க முடியுமாம்.

இந்த இயந்திரத்தின் உதவியைக் கொண்டு குடிசைத் தொழிலாக செங்கல் தயாரிக்கலாமாம்.

சேலம் இரும்புக் கனி தரக் குறைவானதாம்!

உருக்குத் தொழிற்சாலைகள் நிறுவ கஷ்டங்கள் உள்ளதாம்!

சென்னை சர்க்கார் அறிக்கை

மக்கள்சபையில் உறுப்பினரின் கேள்வி ஒன்றுக்குப் பதில் கூறுகையில், கோவை தொழில் நிறுவனமொன்றுக்கு இரும்புத் தொழிற்சாலை நிறுவ 'லைசென்ஸ்' வழங்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாக மத்திய தொழில் துறை அமைச்சர் தெரிவித்தாரென்று சிறிது நாட்களுக்கு முன்பு செய்தி வெளியிடப்பட்டது. இதனால் சேலம் மாவட்டத்தில் அரசாங்கத் தரப்பில், இரும்பு—உருக்குத் தொழிற்சாலை அமைப்பு கைவிடப்பட்டதென்று சிலர் தவறாக எண்ணிக்கொண்டனர்.

இந்தப் பீதிக்கு ஆதாரமே கிடையாதென விளக்க அரசாங்கம் விரும்புகிறது. தனிப்பட்டோரால் சில சிறிய தேனிம்புத் தொழிற்சாலைகள் நிறுவப்படுவதால் பெரியதொரு இரும்பு—உருக்குத் தொழிற்சாலை நிறுவப்படுவது நின்றுவிடாது. சேலத்தில் இரும்பு—உருக்குத் தொழிற்சாலையை நிறுவுவது அரசாங்கத்தின் நோக்கமாகவே இருந்துவருகிறது.

சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் இரும்பு மூலப்பொருள் மிகத் தரம் குறைந்ததாயுள்ளது. இத் தொழிலுக்கு மேலும் சுண்ணாம்புக் கல்லும், நல்ல 'கோக்' நிலக்கரியும் தேவை. சுண்ணாம்புக்கல் சேலம் மாவட்டத்திலேயே தகுந்த தரமுள்ளது போதுமான அளவு கிடைக்கிறது. ஆனால் 'கோக்', மேற்கு வங்கம், பீகார் முதலிய இடங்களிலிருந்து வரவேண்டும். செலவைக் கவனித்தால் இது சாத்தியமானதல்ல. எனவே, சேலத்தின் குறைந்த தரமுள்ள இரும்பு மூலப் பொருளை, உருக்கு உலை மூலம் இரும்பாக்குவது சிக்கன முறையாகாது.

எனினும், இதற்கு ஜெர்மனி மற்றும் சில நாடுகள் வேறு வழியை மேற்கொண்டுள்ளன. அந்த வழியில், பழுப்பு நிலக்கரியைக்கூட உபயோகித்துக் குறைந்த தரமுள்ள மூலப் பொருளை இரும்பாக்கலாம்.

அம்மாதிரி சாதனம் ஒன்றை ஜாம்ஷெட்பூரில் நிறுவ இந்திய அரசாங்கம் சமீபத்தில் அனுமதித்துள்ளது. சேலத்தின் இரும்பு மூலப் பொருள் அங்கு பரிசோதனை செய்யப்படும். அதற்குள் நெய்வேலி பழுப்பு நிலக்கரியும் போதிய அளவு கிடைக்க ஆரம்பித்துவிடுமென்று நம்பப்படுகிறது. அதற்குப்பின், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை நிறுவுவது பற்றி முடிவு செய்யப்படும்.

இந்த நிலையில், சேலம் பகுதியில் ஆண்டுக்கு 15,000 டன்னுக்கு மேற்படாத அளவுக்குத் தேனிரும்பு உற்பத்தி செய்ய சில தொழிலதிபர்கள் முன்வந்துள்ளனர். அதற்கு வேண்டிய மூலதனம் ரூ. 40 இலட்சம்தான். சென்னை அரசாங்கத்தைக் கலந்துகொண்டு இந்திய அரசாங்கம் கோவையைச் சேர்ந்த 'டெக்ஸ்டூல் கம்பெனி'க்கு, தேனிரும்புத் தொழிற்சாலை நிறுவ 'லைசென்சு' வழங்கியுள்ளனர். இந்த நிறுவனம், சேலத்திலுள்ள இரும்பு மூலப் பொருளை எடுத்து, கோவையிலுள்ள தங்கள் தொழிற்சாலையில் உற்பத்தி வேலைகளைச் செய்யும். இம்மாதிரியான தேனிம்பு உற்பத்தித் தொழில் அங்கு இன்னும் சில சாத்தியமாகும். அவற்றை மேற்கொள்ள வரும் தொழிலதிபர்களை அரசாங்கம் வரவேற்கும்.

'அம்பர் சர்க்கா' மோகத்தின் விளைவு?

புதுடில்லி, ஜுன் 17—

சென்ற ஆண்டில் 'அம்பர் சர்க்கா' உள்பட கதர் தொழிலுக்கு ரூ. 1,87,00,000 கடனாகவும், ரூ. 5,14,00,000 மானியமாகவும் செலவிடப்பட்டதாம்.

இந்த ஆண்டில் ரூ. 4,82,00,000 கடனாகவும், ரூ. 6,35,00,000 மானியமாகவும் மத்திய அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாம்.

கடந்த 4 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட 12,86,00,000 தொகையில் ரூ. 12,32,00,000 செலவிடப்பட்டதாம்.

1956—57-ல், கதர் உற்பத்தி 2,40,00,000 கெசம் என்றும், இதன் மதிப்பு ரூ. 4,93,00,000 என்றும், விற்பனையின் மூலம் ரூ. 5,95,00,000 கிடைத்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

கதர் உற்பத்தி வேலையில் மொத்தம் 13,83,000 பேர் ஈடுபட்டுள்ளனராம்.

'அம்பர் சர்க்கா' மூலம் 53,000 பேர்களுக்கே வேலை கிடைத்துள்ளதாம்.

புதிய வரிகள் கிடையாதாம்!

ரூ. 9 கோடி துண்டுவிழும் மைசூர் வரவு-செலவுத் திட்டம்

பெங்களூர், ஜுன் 17—

1957—58-ம் ஆண்டிற்கான மைசூர் மாநில வரவு-செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் சட்டசபையில் தந்துள்ளார்.

திட்டத்தில் ரூ. 9,35,99,000 துண்டுவிழுகிறது. திட்டத்திற்காக ரூ. 8,23,32,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

எந்தவிதமான புதிய வரியும் விதிக்கப்படாததே வரவு-செலவுத் திட்டத்தில் சிறப்பாகும்.

60 - இலட்சம் மரங்கள் நடப்படுமாம்!

சென்னை, ஜுன் 18—

'மரம் நடும் வாரம்' ஜுலை முதல் தேதி ஆரம்பமாகிறது; அக்டோபர் 2-ந் தேதியன்று மரம் நடும் சிறப்புவாரம் துவக்கப்படும். இவ்விரு வாரங்களிலுமாக தமிழ்நாட்டில் 60 இலட்சம் மரங்களை நடுவதற்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என்று அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

இந்த இலட்சிய அளவு, மாவட்ட கலெக்டர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளதாம்; போதுமான விதைகளையும் பதியங்களையும் சேகரிக்கும்படி காட்டிலாகா தலைமை அதிகாரியும், விவசாயத் துறை டைரக்டரும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனராம்.

ஆயிரம் மாணவர்கள் அமைத்த இணைப்புச்சாலை

'இயற்கை நிலையம்' செல்ல உதவுகிறதாம்

சென்னை, ஜுன் 18—

செங்கற்பட்டு மாவட்டத்தில் வேடந்தாங்கல் என்னுமிடத்தில் உள்ள பறவைகள் கூடி வாழும் இயற்கை நிலையத்திற்குப் புதிதாக ஒரு சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 3 மைல்; அகலம் 22 அடி. இச்சாலையை மாணவர் உதவிப் படையினர் அமைத்துள்ளனர். சென்னை, செங்கற்பட்டு, வடாற்காடு மாவட்டங்களிலிருந்து சுமார் 1000 மாணவர்கள் இவ்வேலையில் ஈடுபட்டனர்.

நெய் விநியோக மோசடி வழக்கு

நால்வருக்கு சிறைத் தண்டனை

புதுடில்லி, ஜுன் 16—

'சிந்து நெய் விநியோக மோசடி வழக்கு' என்று பிரபலமாகக் குறிப்பிடப்பட்டுவந்த வழக்கில் இப்பொழுது தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த நான்கு பேர், இந்திய சர்க்காருக்கு, மோசடியாகத் தயாரித்த கொள்முதல் 'பில்'களைச் சமர்ப்பித்துப் பெரும் அளவில் பணம் வாங்கி சர்க்காரை ஏமாற்றிய வழக்கு இதுவாகும்.

நாட்டுப் பிரிவினைக்கு முன் இந்திய சர்க்காருக்காக சுத்தமான நெய் கொள்முதல் செய்து விநியோகம் செய்வதற்காகக் கராச்சியைச் சேர்ந்த நெய் கொள்முதல் ஏஜென்சியொன்று இந்திய சர்க்கார் உணவு இலாகாவின் கொள்முதல் டைரக்டருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி அதன் நிர்வாக டைரக்டரும், அதைச் சேர்ந்த மூன்று ஊழியர்களும் ஒன்று சேர்ந்து சதிசெய்து ஏமாற்றினர்.

இந்த வழக்கு சம்பந்தமாக நிர்வாக டைரக்டருக்கு இரண்டு குற்றச்சாட்டுகளின் பேரில் சதியாலோசனை, மோசடி ஒவ்வொன்றுக்கும் இரண்டு ஆண்டு வீதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. சிறைவாசத் தண்டனைகளை அவர் ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டுமென்றும் தீர்ப்பாகியது. மற்ற மூவருக்கும் இரண்டு குற்றச்சாட்டுகளில் ஒவ்வொன்றுக்கும் ஆறு மாதம் வீதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்கள் தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பாகியது.

1,03,769 பேர் வேலைகேட்டனர்

புதுடில்லி, ஜுன் 17—

1957 சனவரி முதல் மார்ச் திங்கள் முடிய மொத்தம் 1,03,769 பேர் வேலை கேட்டு இந்திய அரசாங்க வேலை தேடித் தரும் நிலையத்தில் பதிவுசெய்து கொண்டனராம். மொத்தம் 13,888 பேர்களுக்கு மட்டுமே வேலை தேடித் தரப்பட்டதாம்.

வேலை கேட்டவர்களில் 87,788 பேர் மெட்ரிகுலேஷன் படித்தவர்களாம்.

இவர்களில் 9,653 பட்டதாரிகள், 103 டாக்டர்கள், 9,330 பொறியியல் பட்டம் பெற்றவர்கள் உள்ளனராம்.

இதைத் தவிர, 16,817 பெண்களுக்கும் வேலையில்லையாம்!

அதிசயம்— ஆனால் உண்மை!

கேரி, ஜுன் 18—

ஒரு வாலிபரை எட்டு பேர் அடித்துத் துன்புறுத்தினராம். அந்த வழக்கை விசாரித்த நீதிபதி, தண்டனையின் ஒரு பகுதியாக, அந்த எட்டு பேர்களுக்கும் தன் செலவில் மொட்டையடித்தாராம்.

அடிபட்ட வாலிபர் தலையில் ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்துகையில் தலைமயிரை இழக்க வேண்டியதாயிற்று என்று தெரிந்து கொண்டு நீதிபதி இவ்வாறு உத்திரவு பிறப்பித்தாராம்!

நேரடி நடவடிக்கை தவிர வேறு வழி?

லக்னோ, ஜுன் 17—

"இரயில்வே காரியாலய ஊழியர்கள் நேரடி நடவடிக்கையில் இறங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதற்குக் காரணம், ஊழியர்களின் கோரிக்கைகளை இதுவரை கவனிக்காததேயாகும்" என்று சங்கத் தலைவர் டாக்டர் லங்கா சுந்தரம் தெரிவித்துள்ளார்.

வண்ணைத் தொகுதி வழக்கு நிதிக் கூட்டம்

செழியன் தலைமையில் அண்ணு சொற்பொழிவு

சென்னை, ஜூன் 19—

15—6—57 மாலை 6-30 மணி அளவில் சென்னை—கோகலே மண்டபத்தில், வண்ணைத் தொகுதி தேர்தல் வழக்கு நிதி சிறப்புக் கூட்டம், தோழர் சேதுராசன் முன்மொழிய, தோழர் அன்பரசு வழிமொழிய தோழர் இரா. செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் அண்ணு அவர்களும், தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் அவர்களும் சொற்பொழிவாற்றினர். மக்கள் திரள் மண்டபம் முழுவதும் நிறைந்து வழிந்தது.

தலைவர் செழியன் அவர்கள் தமது தலைமையுரையில், தி. மு. கழகம் தேர்தல் முடிந்து ஒரு சில தொகுதிகளில் ஏன் வழக்கு மன்றம் செல்ல வேண்டியிருக்கிறது என்ற விளக்கத்தையும், சுயமரியாதை இயக்க காலத்தில் இருந்து, நீதிமன்றம் செல்ல விரும்பாமல்தான் அண்ணு அவர்களும், பிற தோழர்களும் பணியாற்றினார்களென்றும், ஆனல் தேர்தலில் நமக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஊராறியச் செய்யவே நீதிமன்றம் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும், தேர்தலில் நாம் பெற்ற வெற்றிகளைப் பற்றியும், நமக்கு இருந்த எதிர்ப்புகளைப் பற்றியும், கடந்த காலங்களில் யார் யார் 'காங்கிரசின் உண்மையான எதிரி நாங்கள்தான்' என்று சொல்லிக்கொண்டார்களோ அவர்கள் தேர்தல் நேரத்தில் காங்கிரசுக்குத் துணைபோனதையும், அவ்வாறு உள்ளவர்களின் ஆதரவால் காங்கிரஸ் பெறற வெற்றி உண்மையான வெற்றியாகாதென்றும் விளக்கி, காங்கிரஸ் முன்னேர் கட்டிவைத்த பழங் கட்டிடமென்றும், அக்கட்டிடத்திற்கு இப்பொழுது 4 அணு வாடகையைப்போலக் கொடுத்தவர்கள் எல்லாம் உரிமையாளனுகிவிடுகிற விந்தையை விளக்கியும், தி. மு. கழகத்தின் நிலையை தெளிவாக்கியும் சிறப்புரை நிகழ்த்தினர்.

அடுத்து தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் பேசுகையில், கழகம் தேர்தலில் ஈடுபட்டதற்குப் பிறகு, அதற்கு ஏற்பட்ட வளர்ச்சியையும், இந்தியப் பேரசினர் விதித்துள்ள வரிக் கொடுமைகளை எதிர்க்க, தி. மு. கழகம் ஒன்றினல்தான் முடியும் என்றும், மற்றவர்கள் தங்களின் ஏக இந்திய இலட்சியத்தின் அடிப்படையில் வரிகளை எதிர்க்க சரியான காரணம் காட்டமுடியவில்லையென்றும், தி.மு.க. இலட்சியத்தின் அடிப்படையில்தான் வரிக்கொடுமைகளை எதிர்க்கமுடியுமென்றும், அதற்கான ஆதாரங்களை விளக்கியும், அமைச்சர்கள் தங்கள் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்வதாகக் கூறுவதிலுள்ள உண்மையையும், பெரும் பெரும் முதலாளிகள் வருமான வரியை ஏமாற்றுவதை அமெரிக்க நிபுணர்கள் சுட்டிக்காட்டியதையும், அதை மறுத்து இவர்கள் அமைத்த ரெவின்யூ போர்டு கொஞ்சம் குறைத்து சுட்டிக் காட்டியதையும், அதை மறுத்து நேருபேசியதையும் ஆதாரங்களுடன் விளக்கி, இவர்கள்தான் சோஷலிச சமுதாயம் அமைப்பார்களா என வினவினர். மேலும் அரசாங்க ஊழல்களைப் புள்ளி விவரங்களோடு விளக்கிக் காட்டினர்.

இறுதியாகப் பேசிய அண்ணு அவர்கள், கழகம் வளர்ந்துள்ள நிலையையும், அது இயங்க போதிய வசதியற்றதன்மையையும், நேருவின் தர்ம சங்கடமான நிலையையும் விளக்கி சிறப்புரையாற்றினர் (ந. நி.)

உருளைக்கிழங்கு சத்துள்ள உணவாம்!

மக்கள் தொகை பெருகிவரும் நாட்டிற்கு இன்றியமையாததாம்

மத்திய உணவு அமைச்சர் 'உபதேசம்' செய்கிறர்

சிம்லா, ஜூன் 18—

" மக்கள் தொகை பெருகி வருகிற ஒரு நாட்டில் உருளைக்கிழங்கின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூறுவதற்கில்லை. பரம்பரையான ஆதாரப் பழக்கங்களைக் கைவிடமுடியாத மனப்போக்குக் காரணமாய் எதிர்ப்புணர்ச்சி இருந்த போதிலும், அதற்காக உண்மையிலேயே நல்ல ஒரு உணவுப் பொருளைப் பிரபலப்படுத்தாமல் இருக்க முடியாது" என்று, மத்திய உணவு—விவசாய அமைச்சர் ஏ. பி. ஜெயின், அ. இ. உருளைக்கிழங்கு ஆராய்ச்சி ஊழியர்கள் மாநாட்டின் பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கோதுமைக்கு அடுத்தபடியான முக்கிய உணவு உருளைக்கிழங்கு தான் என்றும், மேல்நாடுகளில் அது முக்கிய உணவுப் பொருளாக இருக்கிறதென்றும் ஆகாரவளம், தரம் ஆகியவற்றில் மற்ற தானியங்களைவிட அது மேலானதென்றும், உஷ்ண சக்தி தருவதில் அதற்கு ஈடு வேறெதுவும் இல்லையென்றும் அவர் கூறியிருக்கிறர்.

" இந்தியாவுக்கு உருளைக்கிழங்கு சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்புதான் வந்தது. ஆனல் சமீப காலம் வரையில் அதைப் பிரதான உணவுப் பொருளாக ஆக்குவதற்கு முயற்சி செய்யப்படவில்லை.

" உருளைக்கிழங்கு சிறந்த ஆகாரப் பொருள் என்பதில் ஐயமில்லை. மேல்நாடுகளில் அது பிரதான உணவாக இருக்கிறது. கார்போஹைட்ரேட் அளிப்பதற்கு அது சிறந்த ஆதாரமாகும். அதில் இரும்பு, சுண்ணும்பு, மாங்கனீஸ், கந்தகம், பொட்டாசியம் ஆகிய கனிப பொருள்களும் 'சி', 'பி' வைட்டமின் சத்துக்களும் அதில் ஏராளமாக உள்ளன" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறர்.

நீதி நிலைக்கிறது!

5 கம்யூனிஸ்டுகள் விடுதலை

வாஷிங்டன், ஜூன் 17—

அமெரிக்க அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக சதி செய்தனர் என்று 5 கம்யூனிஸ்டுத் தலைவர்களுக்கு தலா 10,000 டாலர் அபராதமும், 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டதாம்.

இவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை அமெரிக்காவின் பிரதம நீதிமன்றம் ரத்து செய்து தீர்ப்பளித்துள்ளதாம்.

இதே குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட 9 கம்யூனிஸ்டுகளின் வழக்கை மீண்டும் விசாரணை நடத்த தீர்மானிக்கப்பட்டதாம்.

தமிழ்நாட்டில் புகையிலை சாகுபடி

ஒரு புள்ளி விவரம்

தமிழ்நாட்டில் 1957 பிப்ரவரி மாதம் முடிய 47,600 ஏக்கரில் புகையிலை சாகுபடியானதாகவும் மொத்த விளைச்சல் 25,800 டன் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு, நீலகிரி மாவட்டங்களில் புகையிலை பயிராகவில்லை. தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் முந்திய ஆண்டைவிட குறைவாகவும், இதர மாவட்டங்களில் அதிகமாகவும் புகையிலை பயிராயிற்று.

சோஷலிஸ்டுகளின் போராட்டத் திட்டங்கள்

அண்ணுவுடன் கலந்து உரையாட டாக்டர் லோகியா விழைவு

அசோகனை மூதாதையர் என ஏற்க வேண்டுமாம்

சேலம், ஜூன் 16—

சோஷலிஸ்டுக் கட்சியின் ஆகஸ்டு மாத போராட்டத் திட்டங்கள் சம்பந்தமாக அண்ணு அவர்களைச் சந்தித்துப் பேச விரும்புவதாக சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் டாக்டர் லோகியா தெரிவித்தார்.

சோஷலிஸ்டுக் கட்சியின் பொதுக்கூட்டம் 15-ந் தேதி மாலை சேலம் போஸ் மைதானத்தில் தோழர் எஸ். வி. காளியப்பன் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பேசிய சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் டாக்டர் லோகியா குறிப்பிட்டதாவது :—

" ஆகஸ்டு மாதத்தில் போராட்டம் நடத்த சோஷலிஸ்டுக் கட்சி 18 திட்டங்களை வைத்துள்ளது. சென்னைக்கு 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்கவேண்டும் என்பது 18 திட்டங்களில் ஒன்ருகும். இந்தக் கோரிக்கையை ஆதரிப்பதாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணுதுரை கூறியுள்ளார்; அதைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். 18 அம்ச திட்டங்களையும் அண்ணுதுரை அவர்கள் பரிசீலனை செய்தால் நன்ருக இருக்கும். ஏற்கனவே ஒரு தடவை நான் அண்ணுதுரையை சந்தித்துப் பேசி இருக்கிறேன். இந்த 18 அம்ச திட்டங்களை பரிசீலனை செய்வது சம்பந்தமாக நான் மீண்டும் அண்ணுதுரையை சந்தித்துப் பேச விரும்புகிறேன்

"இராஜேந்திர சோழன் என்னுடைய முன்னேர்கள் வம்சத்தைச் சேர்ந்தவன் என்று கூறுகிறேன். நான் இவ்வாறு கூறுவதைக்கண்டு நீங்கள் வியப்படையலாம். அந்தக் காலத்திலேயே இந்தியாவை ஒன்றுபடுத்தி ஆளவேண்டும் என்ற எண்ணம் கங்கை கொண்டபுர சோழனுக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவேதான், என்னுடைய முன்னேர்கள் அவர்கள் என்று கூறுகிறேன். இராசேந்திர சோழன் என்னுடைய முன்னேர்கள் ஆவதுபோல் அசோகன் போன்றவர்கள் அண்ணுதுரை முதலியவர்களுக்கு முன்னேர்களாவார்கள் !"

மேலும் அவர் கூறியதாவது :-

" நேரு, காமராசர் ஆகியவர்களின் தவருன கொள்கையால் தான் தமிழுக்கும் இந்திக்கும் சண்டை ஏற்படுகிறது. உண்மையில் தமிழுக்கும்—ஆங்கிலத்துக்கும்தான் சண்டை ஏற்படவேண்டும். சுதந்திரம் அடைந்தவுடனேயே தமிழ் நாட்டில் சட்டமன்றங்கள், கல்லூரிகள் சட்டசபைகள் முதலியவைகளின் நடவடிக்கைகள் தமிழில் நடைபெற்றிருக்க வேண்டும். அவ்வாறு நடைபெருது ஆங்கிலத்தில் நடைபெற்றுக்கொண்டு வருவது வெட்கக்கேடான விஷயம். காமராசர் கூட ஆங்கிலம் கற்றுக்கொள்வதாகக் கேள்விப்பட்டேன். விந்தையாக இருக்கிறது, அவருடைய செயல் !

" வேலையில்லாத் திண்டாட்டத்தை எவ்வாறு போக்குவது என்று கேட்கலாம். நாட்டில் விவசாயப்படை நிறுவினல் 10 இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கும். கல்வி அறிவில்லாதவர்களுக்குக் கல்வியறிவுப் புகட்ட படித்த வாலிபர்களைக்கொண்டு அறிவுப்படை ஏற்படுத்தலாம். இதனுலும் 10 அல்லது 15 இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கும். தொழிற்சாலைகளில் வாரத்திற்கு 40 மணி நேரம் வேலை என்று ஏற்படுத்தினல் இதனுலும் பலருக்கு வேலை கிடைக்கும்."

ஆகஸ்டு 9-ல்!

சோஷலிஸ்டுக் கட்சி போராட்டம் நடத்தும்!

சேலம், ஜூன் 16—

ஆகஸ்டு 9-ல் போராட்டம் நடத்த சோஷலிஸ்டுக் கட்சி திட்டமிட்டுள்ளது.

இந்த முடிவு சேலம் மாவட்ட சோஷலிஸ்டுக் கட்சி ஊழியர்களின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு வி. சி. பெருமாள் தலைமை வகித்தார்; கூட்டத்தில் லோகியா பேசினர். தமிழ்நாட்டில் ஆகஸ்டு மாதத்திற்குள் 5 இலட்சம் போராட்டக் கையெழுத்துகள் வாங்க வேண்டும் என்றும், 10,000 புதிய உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும் என்றும் கூட்டத்தில் கூறப்பட்டது.

'தனித்துப்போராடினல் வெற்றி கிடைக்காது'

ம. பொ. சி.-யும் கூறுகிறர்

சேலம், ஜூன் 19—

'தமிழ் நாடு' என்று சென்னைக்கு பெயரிடுமாறு போராட்டம் நடத்தப்போவதாக சோஷலிஸ்டு கட்சித் தலைவர் லோகியா அறிவித்துள்ளார் அல்லவா?

லோகியா தனித்து போராடினல் வெற்றி கிடைக்காது என்றும், மற்றக் கட்சிகளையும் சேர்த்துப் போராடினல்தான் வெற்றி கிடைக்கும் என்றும் தமிழரசு கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், சேலம் போஸ் மைதானத்தில் 16-ந் தேதி மாலை நடைபெற்றபொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டார். (ந. நி.)

பாதை விபத்துக்களில் 40,000 பேர் மரணம்!

6,20,00,000 கார்களும், டிரக்குகளும் அமெரிக்காவின் நெடுஞ்சாலைகளில் ஓடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு சுமார் 40,000 பேர் நெடுஞ்சாலை விபத்துகளில் மரணமடைவதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கேரளப் பல்கலைக்கழக போதனு மொழி

கேரள பல்கலைக்கழகத்தில் மலையாள மொழியைப் போதனு மொழியாகச் செய்வதுபற்றி அரசாங்கம் ஆராய்ந்துவருகிறது என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தெரிந்துகொள்ளுங்கள் !

புதுடில்லி, ஜூன் 17—

தீப்பெட்டி குடிசைத் தொழிலாக 186 தொழிற்சாலைகளில் அனுமதிக்கப்பட்டனவாம்.

160 சோப் தயாரிப்பு தொழிற்சாலைகளும், 25 காகிதத் தயாரிப்பு தொழிற்சாலைகளும் 1956-57-ல் நிறுவப்பட்டனவாம்.

கைநுட்ப வேலைகள் அபிவிருத்திக்காக ரூ. 34 40,000 மானியமாகவும், ரூ. 17,60,000 கடனுகவும் தரப்பட்டுள்ளதாம்.

கல்விப் படக் காட்சி

கல்விப் படக் காட்சிகளை நடத்தும் கல்வி நிறுவனங்கள் சினிமாப் படச் சட்டத்தின்கீழ் லைசென்ஸ் பெற வேண்டிய அவசியமில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது. செலவுக்குத் தேவையான அளவு கட்டணம் மட்டுமே வசூலிக்கலாம். இந்த உத்தரவு ஓராண்டு அமுலிலிருக்கும்.

அன்பளிப்புகள்

3—6—57ல், முடச்சிக்காடு தோழர் கோவேந்தன் - கண்ணம்மாள் வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் வி. அருணசலம் தலைமையில் நடைபெற்றது; மணமக்கள் தங்கள் திருமண விழாவில் கலந்தும், அன்பளிப்புகள் தந்தும், வாழ்த்திதழ்கள் கொடுத்தும் சிறப்பித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறர்கள். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

மணவைத் தோழர் கே. கோவிந்தராசுஅவர்கள் தான் ஓர் ஆண் மகவுக்கு தந்தையான மகிழ்ச்சியின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

சேலம்—ஆத்தூர் எரிக்கோடித் தோட்டம் தோழர் முத்து—தோழியர் சரோசா வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தந்துள்ளனர்.

* * *

திண்டுக்கல் தோழர் தில்லிராசன்—விழுப்புரம் தோழியர் சானகி மணவிழா ஏற்றதன் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தந்துள்ளனர்.

* * *

திருச்சி தோழர் தி. மு. மாரிமுத்து அவர்கள் தான் ஓர் ஆண் மகவுக்கு தந்தையாகி, அம்மகவுக்கு 'நெடுஞ்செழியன்' என பெரிட்டதன் நினைவாக் 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

நெடும்பலம் தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜே. எஸ். கலியாணசுந்தரம் அவர்கள் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ.1 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

2—6—57ல், நடைபெற்ற திருவான்மியூர் தோழர் சா. செல்வராசன்—தோழியர் எ. கோகிலம்பாள் மணவிழாவின் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

சென்னை — பீமண்ணன்பேட்டை — தோழர் தாமோதரன்—தோழியர் இலட்சுமி வாழ்க்கை ஒப்பந்த செய்துகொண்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

விருத்தாசலம் வட்டம்-ஆவடி தி. மு. கழகச் செயலாளர் தோழர் ம. தங்கராசு—தோழியர் அலமேலு ஆகியோர் வாழ்க்கைத் துணைநலமேற்றதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

20—5—57 மாலை 7-மணிக்கு போரூரணி தோழர் பொ. அரங்கசாமி—தோழியர் இரா. சுந்தரம் வாழ்க்கை ஒப்பந்த விழா, குருவிக்கரம்பையில், தோழர் வி. அருணசலம் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் கு. அடைக்கலம், கே. எஸ். எம். கலாநேசன் ஆகியோர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

20—5—57 அன்று முத்துப்பேட்டை பெத்தவேளாங்கோட்டத்தில், தோழர் சிவநேசன்—தோழியர் வேம்பு வாழ்க்கை ஒப்பந்தவிழா நடைபெற்றது; தோழர்கள் மன்னை—துரையரசன், நாதன், பாலகிருஷ்ணன். சிவபுண்ணியம் ஆகியோர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

'டெல்லியின் துரோகத்திற்கு' எதிராக அசாம் குமுறுகிறது

தூன் 22-ல் கண்டன நாள்

மாநில மாநாடு கூட்ட முடிவு

'மந்திரிசபை இராஜிநாமா செய்ய வேண்டும்'

கௌஹாதி, தூன் 18—

அசாமில் நிறுவாமல், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை பீகாரில் நிறுவுவது என்ற டெல்லி சர்க்காரின் முடிவுக்கு எதிராக வரும் தூன் 22-ந் தேதியன்று மாநிலமெங்கும் ஒரு கண்டன நாள் கொண்டாட அசாம் எதிர்க் கட்சிகள் முடிவு செய்திருக்கின்றன. அன்று, டெல்லியின் முடிவுக்கு எதிராக அசாம் மக்களின் கண்டனம் தெரிவிக்கப்படும்.

இதற்காக நிறுவப்பட்டுள்ள செயற்குழு, 'மத்திய சர்க்காரின் முடிவு அசாம் மக்களின் நலன்களுக்குத் துரோகம் இழைப்பதாக உள்ளது' என்று கூறியிருப்பதுடன், 'இந்தத் துரோகச் செயலைக் கண்டிக்கும் வகையில் அசாம் மந்திரி சபை உடனே இராஜிநாமாச் செய்ய வேண்டும்' என்றும் வற்புறுத்தியிருக்கிறது.

'டெல்லியின் முடிவு, இந்த மாநில சட்டசபையின் ஒருமித்த முடிவினை அப்பட்டமாக மீறுவதாகும் என்பதுடன், இந்த மாநில மக்களின் கருத்தையும் அலட்சியம் செய்வதாகும்' என்றும் கூறியிருக்கிறது.

மேலும் எதிர்க் கட்சிகளின் அந்தச் செயற்குழுவினர் தூன் 28-ந் தேதியன்று ஒரு மாநில மாநாடு கூட்டி, எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை நிறுவுவதற்கான இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தத் திட்டம் வகுப்பதெனவும் முடிவு எடுத்துள்ளது.

★

'புறக்கணிக்க அனுமதியோம்- போராடுவோம்'

கரங்கிரஸ் தலைவர் எச்சரிக்கை

"அசாமிலேயே எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை நிறுவவேண்டும் என்ற எங்களின் கோரிக்கை புறக்கணிக்கப்படுவதை அனுமதிக்கமாட்டோம்; அசாம் மக்களில் ஒவ்வொருவரும் அமைதியான வழிகளில் இதற்காகப் போராடுவர்"

என்று, டெல்லி சென்று திரும்பிய அசாம் தூதுக்குழுத் தலைவரான பிமல் பிரசாத் சலிஹா என்ற பிரதேசக் காங்கிரஸ் தலைவர், பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

அரசியல் பிரச்சினை!

"இந்த எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்ற பிரச்சினை, இப்போது ஏறத்தாழ ஒரு அரசியல் பிரச்சினையாகவே ஆகிவிட்டது"

என்று, டில்லி வட்டாரங்கள் கருத்தறிவித்திருக்கின்றனவாம்.

கூட்டு எதிர்ப்பு!

இதற்கிடையில், 'மந்திரிசபை மட்டும் இராஜினமா செய்தால் போதாது; எல்லா சட்டசபை உறுப்பினர்களும் இராஜினமா செய்ய வேண்டும்' என்ற கருத்தை சட்டசபை விவாதத்தின்போது, காங்கிரசார் உட்பட பல உறுப்பினர்கள் தெரிவித்ததாகத் தெரிகிறது.

உழைப்பாளர் நிலை பற்றி அண்ணு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"மற்ருென்று, தொழிலாளர்கள் விஷயத்திலே இன்றையத் தினம் வெகுவாகப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்கிற பலபேர், 'இன்றையத் தினம் தொழிலாளர்கள் முன்னளிலே இருந்த தொழிலாளிகளைப் போல் நேர்த்தியாக வேலை செய்வதில்லை— கண்ணியமாக வேலை செய்வதில்லை—மனம்விட்டு வேலை செய்வதில்லை—வேலை செய்யக் கூடிய சக்தியின் அளவுக்கு வேலை செய்வதில்லை' என்று ஒரு குற்றம் சாட்டுகிருர்கள்; இன்றையத் தினம் அது பலமாகவும் பரவியிருக்கிறது.

குற்றச்சாட்டு வேறு கேடு!

செய்வதில்லை; தந்தி இலாகாவில் வேலை செய்கின்ற எங்களுக்கு 'ஒரு நாளைக்கு இத்தனை தந்திகள் தான் அடிக்கலாம்' என்று எங்களுக்கு ஒரு கணக்கிருக்கிறது; அவ்வளவுக்குத்தான் எங்களுக்கு உடலிலே வலிவும் — உள்ளத்திலே உற்சாகமும் இருக்கும். ஆனல், '20 தந்தி தான் அடிக்கலாம்' என்று ஒரு நிர்ணயம் இருந்தால் நாங்கள் இதுவரையில் 24-ம் 28-ம் சில வேலைகளில் கஷ்டப்பட்டு 30-40 தந்திகளும்கூட அடித்திருப்போம். எவ்வளவு கஷ்டப்பட்டும் மேலிடத்திலிருப்பவர்கள் எங்கள் குறையை கவனிக்காதக் காரணத்தால், 'நாம் எதற்காக மேலே விழுந்துகொண்டு அதிக வேலை செய்வது; செய்யவேண்டிய அளவுக்கு வேலை செய்யலாமென்று இப்பொழுது அந்த 20-தந்திகள் வந்தால் அடிக்கிருேம்; 21-வது தந்தி வந்தால் எழுந்து போய்விடுகிருேம்' என்ருர்; நான் அவரிடத்திலே சொன்னேன்—'நீங்கள் அப்படிச் செய்வதனல் பொதுமக்களுக்கு எவ்வளவு தொல்லை தெரியுமா?' என்று!

"இப்படிச் சில தொழிலாளிகள் தாங்கள் வேலையை குறைத்துக்கொள்கிருர்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டை இரண்டு வகையிலே இன்றையத்தினம் ஆட்சிப் பொறுப்பிலேயிருப்பவர்கள் கவனிக்கிருர்கள்.

"ஒன்று— 'நீங்கள் மேலும் மேலும் உழைத்தால்தான் செல்வம் குவியும்; செல்வம் குவிந்தால்தான் உங்களுக்குக் கூலி அதிகம் கிடைக்கும்; உங்களுக்குக் கூலி அதிகம் கிடைத்தால் தான் உங்களுடைய குறை போகும்; உங்களுடைய குறை போனல்தான் வாழ்க்கையிலே நிறை ஏற்படும்; ஆகையினல் மேலும் மேலும் உழையுங்கள்' என்று ஒரு தத்துவத்தை போதித்துக்கொண்டிருக்கிருர்கள். இதைப் போதிப்பதிலே தலைசிறந்தவராக இருப்பவர் நமது 'முடிசூடா மன்னர்' பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் என்பதை நீங்கள் நன்ருக அறிவீர்கள்.

தந்திகள் தாமதமானது ஏன்?

"அது, தொழிலாளி மீது மட்டுமல்ல; ஒரு திங்களுக்கு முன்னலே தந்தி இலாகாவிலே இருக்கின்ற 'கிளார்க்'குகள் மீதும்கூட அவ்வாறு எண்ணம் பரவிவந்தது. நான்கூட, அந்த தந்தி இலாகாவைச் சேர்ந்த ஒரு நண்பரை தஞ்சாவூரில் சந்தித்துக் கேட்டேன்— 'என்னய்யா, ஏதோ நீங்கள் ஆபீசுக்குள், உட்கார்ந்து கொண்டே செய்கிற வேலையை மெதுவாகச் செய்கிறீர்களாமே; அது என்ன?' என்று கேட்டேன்; எனக்கு அந்த நண்பர் சொன்னர் —'அப்படி ஒன்றும் நாங்கள்

தூத்துக்குடி பஞ்சாலை மூடப்படும்!

நிர்வாகிகள் போக்கு

மதுரை, ஜூன் 18—

மதுரை விசேட தொழில் நீதிமன்றம் நிர்ணயித்தபடி சம்பளம் பெற்றுக் கொண்டு வேலை செய்ய தொழிலாளர்கள் மறுப்பதால், தூத்துக்குடியில் உள்ள பஞ்சு மற்றும் நூற்பு ஆலை (ஹார்வி ஆலை) இன்றுமுதல் மூடப்படும் என்று நிர்வாகிகள் அறிவித்திருக்கின்றனராம்.

தொழிலாளரின் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் ரூ. 26 ஆக இருந்தது; அதை ரூ. 30 ஆக உயர்த்தப்பட வேண்டும் என்றும், உயர்வு பல துறைகளுக்குமாக ரூ. 4 முதல் ரூ. 11 வரை இருக்கும் என்றும், நிர்ணயிக்கப்படாத துறையில் உள்ள வரிசைகளுக்கு ரூ. 2 உயர்வு தரப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு தரப்பட்டிருக்கிறது.

இந்தத் தீர்ப்புக்கு உடன்பட்டு, மதுரை மற்றும் அம்பா சமுத்திரத்தில் உள்ள ஹார்வி ஆலைகள் வேலை செய்வதாகவும், தூத்துக்குடித் தொழிலாளர்கள் இத்தீர்ப்பை ஏற்க மறுப்பதாகவும் கூறப்படுகிறது.

ஜப்பான் நீதிமன்றம் விசாரிக்கக்கூடாதாம்!

வாஷிங்டன், ஜூன் 18—

ஒரு சப்பான் மாது கொலை சம்பந்தப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள அமெரிக்க சார்ஜெண்டு வில்லியம் என்பவரை, ஜப்பானில் நீதிமன்ற விசாரணைக்கு அனுமதிக்கக் கூடாதாம்.

இது அமெரிக்க அரசியல் சட்டத்திற்கு முரணனதாம். இவ்வாறு அமெரிக்கப் பெடரல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இராசா-இராணி மணம் முறிந்தது!

கெய்ரோ, ஜூன் 18—

அரச குடும்பத்தைச் சேர்ந்த தம்பதிகள்!

தலைவியோ ஜோர்தான் அரசருக்கும், இராக் அரசருக்கும் உறவினராம்.

இங்கிலாந்தில் கல்வி பயின்று கெய்ரோ பல்கலைக் கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளாராம்! இது மட்டுமா? அப்பெண்மணி ஜோர்தான் நாட்டு இராணியுமாவார்!

ஜோர்தான் அரசர் உசேன், இளவரசி டினவைக் காதலித்து 1955-ல் மணம் செய்துகொண்டாராம்; 'அல்யா' என்னும் பெண் குழந்தைக்கும் தந்தையானராம்.

சென்ற கிழமை இராணி டினவை, அரசர் உசேன் விவாகரத்து செய்துவிட முடிவு செய்திருப்பதாக அறிவித்துள்ளாராம்.

தன் குழந்தையின் எதிர்காலத்தையும், குடும்ப விவகாரங்களையும் தீர்க்க இராணி பாக்தாத் சென்றுள்ளாராம். இராணியின் வயது 28 தான் என்று தெரிய வருகிறது.

அமெரிக்காவின் சண்டித்தனம்!

4-வது அணுகுண்டு சோதனை

நெவாடா, ஜூன் 18—

67 அடி உயரமான பலூனிலிருந்து 500 அடி உயரத்தில் அணுகுண்டு வெடிக்கப்பட்டதாம். இது 10 கிலோ டன் எடையுள்ளதாம். வெடிக்கப்பட்ட இடத்திலிருந்து 80 மைல் தூரத்திற்கு ஒளி தெரிந்ததாம்.

இந்த ஆண்டில் வெடிக்கப்பட்ட அணுகுண்டு வரிசையில் இது நான்காவதாகும் என்று அணுசக்திக் குழு வெளிப்படுத்தியுள்ளது.

சென்னையில் தடை உத்திரவு நீடிப்பு

சென்னை, ஜூன் 19—

சென்னையிலுள்ள பொது இடங்களில் கூட்டம் அல்லது ஊர்வலம் நடத்துவதற்கு சென்னை நகர போலீஸ் சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ் 3—7—57 வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் காட்டிய பாதையில் செல்ல முடிவு

சீனவுடன் வர்த்தகத் தொடர்பு கொள்ள பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி முடிவு

பான், ஜூன் 18—

பிரிட்டனின் உதாரணத்தைப் பின்பற்றி, சீனமீது உள்ள வர்த்தகத் தடையை தளர்த்த மேற்கு ஜெர்மனி தயாராக இருப்பதாகவும், பிரான்சும் இந்தக் கிழமை சீனமீதுள்ள வர்த்தகத் தடையை தளர்த்தும் என்றும் தெரிய வருகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண் : 6/57

கழகத் தோழர்களுக்கு

★

சென்னை நகரிலும், பிற மாவட்டங்களிலும் விஷக்காய்ச்சல் நோய் பெருவாரியாகப் பரவிப் பலரையும் பாதித்துக்கொண்டு வருவதால், இன்னும் ஒரு திங்களுக்கு, முன்னரே ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள் தவிர, மற்ற கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டாம் என்றும், நோய் பரவவொட்டாமல் தடுப்பதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும் என்றும் ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேம்.

12—6—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

செங்குன்றம் :
'ரெட்ஹில்ஸ்' பிள்ளையார் கோவில் தெருவில்
20—6—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஜி. சாரங்கபாணி
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
என். வி. நடராசன்
(கூட்டத்தில் அண்ணு அவர்கள் சொற்பொழிவு ஒலிபரப்பப்படுவதோடு, 'சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதி'க்கு நிதி அளிக்கப்படும்.)

★

மணப்பாறை :
பழைய சந்தைத் திடல்
21—6—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஏ. எஸ். கணபதி
பேசுபவர் :
ப. உ. சண்முகம்

★

லால்குடி வட்டம்— ஆலம்பாக்கம் :
21—6—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : அ. தம்புசாமி
பேசுவோர் :
மு. கருணநிதி
அன்பில்-தருமலிங்கம்
ஆர். மாணிக்கம்
கே. கே. சாமி

★

செட்டிக்குளம் :
20—6—57 இரவு 7 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
பேசுவோர் :
மு. கருணநிதி
அன்பில் தருமலிங்கம்
து. ப. அழகமுத்து

★

செம்பூர் :
(நெல்லை மாவட்டம்)
21—6—57 இரவு 7 மணிக்கு
தலைவர் : டி. தனசேகரன்
பேசுவோர் :
வ. செ[illegible]ராசேந்திரன்
எஸ். இரத்தினவேல்பாண்டியன்
வி. முருகு
அண்ணமலை

சொற்பயிற்சிக் கூட்டம்

20—6—57 இரவு 8-30 மணிக்கு சென்னை 47-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தியாகராயநகர் கழகப் பணிமனையில் தோழர் மணவாளன் தலைமையில் 'தமிழ் ஆட்சி மொழி' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

இலங்கை - யாழ்ப்பாணம் தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு :

23—6—57 மாலை 6 மணிக்கு, யாழ்ப்பாணம் — பெரியகடை, எண் 62, மேல்மாடியிலுள்ள நமது கழகப் பணிமனையில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, மலைநாட்டுப் பகுதிகளுக்கு பணிபுரிய சென்றுவிட்ட கழகச் செயலாளர் திருமாவன் அவர்களுக்கு பதிலாக புதிய செயலாளரையும், செயற்குழு உறுப்பினர்களாக மேலும் சிலரையும் தேர்ந்தெடுக்க வேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் தவருது வருகைதர வேண்டப்படுகிருர்கள்.

சென்னை, ஜூன் 18—

நெல், கரும்பு, பயிர்களுக்கு 1957—58-ம் ஆண்டிலும் தீவிர உரமிடும் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த அரசாங்கம் அனுமதித்துள்ளது. அதற்கு செலவு ரூ. 68,50,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.